விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் உள்ள ஜும்மா மஸ்ஜித்தில் தி.மு.க. வேட்பாளர்அன்னியூர் சிவாவை ஆதரித்து அமைச்சர்கள் செஞ்சி மஸ்தான், சி.வி.கணேசன், விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர். பொன். கௌதம சிகாமணி ஆகியோர் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்குச் சேகரித்தனர்.

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க.விற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பனையபுரம் ஊராட்சி தேர்தல் பணிமனையில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ வீ.மெய்யநாதன் வாக்கு செலுத்தும் இயந்திரத்தின் மாதிரியை வெளியிட்டு பிரச்சாரத்தை தொடங்கி வைத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் புதுக்கோட்டை வடக்கு மாவட்டத் துணைச் செயலாளர் க.மதியழகன், திருவரங்குளம் மேற்கு ஒன்றியச் செயலாளர் டி.தங்கமணி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு.சண்முகம். எம்.எம்.பாலு மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

165 வது பிறந்த நாளையொட்டி

திராவிட மணி இரட்டைமலை சீனிவாசன் சிலை - படத்திற்கு மாலை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் - கயல்விழி செல்வராஜ் அணிவித்தனர்!

சென்னை, ஜூலை 9 - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திவான்பகதூர் திராவிட மணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாளான நேற்று முன்தினம் (7.7.2024) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள் திவான்பகதூர் திராவிட மணி இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், கோழியாளம் கிராமத்தில் இரட்டைமலை - ஆதியம்மாள் தம்பதியினருக்கு 7.7.1859 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார். அவர், பள்ளியில் படிக்கின்ற காலத்தில் சாதிக் கொடுமைகள் பற்றி அறிந்து அவற்றை அகற்றுவதற்கு உறுதியெடுத்துக் கொண்டார். அதற்காக தென்னிந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து ஆதிதிராவிடர் மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைமைகளை நேரில் கண்டறிந்தார். மக்களை கல்வி மற்றும் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையச் செய்ய வேண்டும் என்பதற்காகத் தன் ஆயுள் முழுவதும் நாட்டு மக்களுக்காக பாடுபட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 15.08.2000 அன்று திவான்பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு நினைவு அஞ்சல் தலையினை வெளியிட்டு சிறப்பித்தார்.

இரட்டை மலை சீனிவாசன் அவர்களின் தொண்டுகளையும், தியாகங்களையும் போற்றி அவருக்கு 21 இலட்சம் ரூபாய் செலவில் கிண்டி, காந்தி மண்டபம் வளாகத்தில் நினைவகத்தை உருவாக்கி முழு உருவச் சிலை அமைத்து, இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால், 7.7.2009 அன்று திறந்து வைக்கப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்டம், அச்சரப்பாக்கம் பேரூராட்சியில் ரூபாய் 2 கோடியே 18 இலட்சம் மதிப்பீட்டில் திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு திருவுருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 27.2.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு அரசின் சார்பில், திவான்பகதூர் திராவிட மணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 7ஆம் நாள் அரசு விழாவாக ஆண்டுதோறும் சிறப்பான முறையில் கொண்டாட உத்திரவிட்டார்கள்.

அதன்படி, நேற்று முன்தினம் (7.7.2024) கிண்டி, காந்திமண்டப வளாகத்தில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கும், திருவுருவப்படத்திற்கும் ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல. சுப்பிரமணியன் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், இரட்டைமலை சீனி வாசன் அவர்களின் கொள்ளு பெயர்த்தி டாக்டர். நிர்மலா அருள் பிரகாஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

அதே போன்று, செங்கல்பட்டு மாவட்டம், அச்சரப்பாக்கம் பேரூராட்சியில் தேன்பாக்கம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரது மணிமண்டபத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். எஸ்.பாலாஜி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

காலனி ஆதிக்கத்தை விட ஒன்றிய பா.ஜ.க. அரசு மோசமாக திகழ்கிறது!

மூன்று குற்றவியல் சட்டங்களை சட்ட ஆணையத்திற்கு அனுப்ப வேண்டும்!

தி.மு.க. சட்டத்துறை சார்பில் நடைபெற்ற உண்ணா விரத அறப்போராட்டத்தில் ப.சிதம்பரம் எம்.பி. பேச்சு!

சென்னை, ஜூலை 9 - காலனி ஆதிக்கத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு மோசமாக செயல்படுகிறது என்றும் 3 குற்றவியல் சட்டங்களை நிறுத்தி வைத்து, சட்ட ஆணையத்திற்கு ஒன்றிய அரசு அனுப்பிட வேண்டும் என்று கழக வழக்கறிஞர்கள் சார்பில் புதிய குற்றவியல் சட்டங்களை கண்டித்து நடைபெற்ற அறப்போராட்டத்தில் பங்கேற்ற ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்திய குற்றவியல் சட்டம் (ஐபிசி), இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் (சிஆர்பிசி) மற்றும் இந்திய சாட்சிகள் (ஐஇசி) சட்டங்களுக்கு மாற்றாக, பாரதிய சாக்ஷியா, பாரதிய நியாய சன்ஹிதா, பாரதிய நாகரிக் சுரக்ஷா என்ற பெயரில் மூன்று புதிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, அவை ஜூலை 1ஆம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளன.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு வழக்கறிஞர்கள் சங்கம் போராட்டம் நடத்தி வருகின்றன. அந்த வகையில், திமுக வழக்கறிஞர் அணி சார்பாக சென்னை எழும்பூரில் உள்ள இராஜரத்தினம் மைதானம் அருகே உண்ணாவிரத அறப்போராட்டம் நடைபெற்றது. இதில் கழக பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் மற்றும் கழக வழக்களிஞர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

இதில் கலந்து கொண்ட காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம், உண்ணாவிரத அறப்போராட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து ப.சிதம்பரம் பேசியதாவது, “சில விஷயங்களை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இந்த சட்டம் எதற்கு? 95 சதவீதம் பழைய பிரிவுகள், பழைய வாசகங்கள், பழைய சொற்கள் அப்படியே புதிய சட்டத்தில் காப்பி அடித்துள்ளனர். இதை அரசு மழுப்புகிறதே தவிர, விவாதத்திற்கு தயாராக இல்லை. 513 பிரிவுகளில் 453 பிரிவுகளை ஏன் மாற்ற வேண்டும்?

என்ன காலனி ஆதிக்கத்தை நீங்கள் எதிர்க்கிறீர்கள்? என கேள்வி எழுப்பினார். மேலும், புதிதாக ஒரு பிரிவை சேர்க்க வேண்டும் என்றால் புதிதாக சேர்த்திருக்கலாம். அனைத்து சட்டங்களிலும் எண்களை மாற்றியுள்ளனர். வழக்கறிஞர்கள், நீதிபதிகள், காவல்துறை அதிகாரிகள் என அனைவரும் மீண்டும் இதனை புதிதாக நினைவு வைக்க வேண்டும்” என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், “பல நீதிமன்றங்களில் இது புதிய குழப்பத்தை ஏற்படுத்தும். சட்டக்குழுவை ஆராயாமல் புறக்கணித்து இந்தச் சட்டத்தை நிறைவேற்ற என்ன காரணம்? சட்டக் குழுவிற்கு இதை பரிந்துரைக்காதது, ஆலோசனையை கேட்காதது மிகப்பெரிய தவறு.

மரண தண்டனை தேவை இல்லை, ஆயுள் முழுவதும் தண்டனை என திருத்தியுள்ளனர். இந்த சட்டங்களை நிறுத்தி வைத்து, சட்டக்குழுவிற்கு பரிந்துரைக்க வேண்டும் என கோரிக்கை வைத்தார். மேலும், காலனி ஆதிக்கத்தை விட மோசமான அரசாக பாஜக அரசு உள்ளது என குற்றம் சாட்டினார்.

3 புதிய குற்றவியல் சட்டங்களில் திருத்தங்கள் வேண்டும் என்று ஒவ்வொரு மாநில சட்டப்பேரவையில் முடிவெடுக்கப்பட்டால், ஒன்றிய அரசு ஒப்புதல் தர வேண்டும், ஆனால் ஒப்புதல் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. புதிய குற்றவியல் சட்டங்களை ஒன்றிய அரசு நிறுத்தி வைக்க வேண்டும். மேலும், அந்த சட்டங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும்” என்று ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் பேசினார்.

விக்கிரவாண்டி தொகுதியில்

நாகை மாவட்டத்தினர் வீடு வீடாக வாக்குச் சேகரிப்பு!

மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் பிரச்சாரம்!

நாகை, ஜூலை 9 - கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கினங்க விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் அன்னியூர் ஏ.சிவாவை ஆதரித்து நாகை மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கானை ஒன்றியம் கானைகுப்பம் ஊராட்சியில் உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி, பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, விழுப்பு ரம் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் பொன். கௌதமசிகாமணி ஆகியோர் முன்னிலையில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவருமான என். கௌதமன். தலைமையில் நாகை மாவட்டத்தைச் சேர்ந்த கழகத்தினர் மற்றும் காணை ஒன்றியக் கழகத்தினர் காணைகுப்பம் ஊராட்சி உள்ள கழக நிர்வாகிகள் பாகம் எண் 124.125ஆகியவற்றில் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தனர்.

விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் தேர்தல் பணியில் முன்னாள் அமைச்சர், தாட்கே தலைவர் உமதிவாணன், நாகை மாவட்டக் கழகத்தைச் சேர்ந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராஜன், க. ராஜேந்திரன், இல.மேகநாதன், க.மறைமலை மாவட்ட கழக துணை செயலாளர்கள் ஆரூர் மணிவண்ணன், சோ.ரவிச்சந்திரன், கற்பகம் மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்டக் கழகப் பொருளாளர் மு.லோகநாதன் ஒன்றியக் கழகச் செயலாளர் காணை தெற்கு வி.இராஜா செல்வ.செங்குட்டுவன், ஆர்.டி.எஸ்.சரவணன், ஆதாமஸ் ஆல்வாஎடிசன், மகா.குமார், கே. பழனியப்பன், என்.சதாசிவம், சோ. பா. மலர்வண்ணன், சிக்கல் என். ஆனந்த்,

நகரக் கழக செயலாளர் இரா.மாரிமுத்து, மா.மி.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பேரூர் கழக செயலாளர் மரிய சார்லஸ், முகமது சுல்தான், கா. அட்சயலிங்கம், சி.சுப்ரமணியன் பொதுக்குழு உறுப்பினர்கள், எல். எஸ் ஈ.பழனியப்பன், எஸ். பன்னீர் செல்வம், மாவட்ட சார் பணி அமைப்பாளர்கள் எஸ்.பால்ராஜ், பி.என். கார்த்தி, ப.உதயகுமார், சுரேந்தர் எஸ் வி.டி.அருள், கமல், தமயந்தி புவனேஸ்வரி பாரிபாலன்

மாவட்ட ஊராட்சி உறுப்பினர் வி.சோழன், கௌசல்யா, இளம்பதி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சிவகுமார், கானைகுப்பம் கிளை கழக செயலாளர்கள் விஜயகுமார், ஏழுமலை, ஊராட்சி மன்றத் தலைவர் சத்யராஜ் மற்றும் நாகை மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட சார்பாக ஒன்றிய நகர பேரூர் கிளை வார்டு கழக நிர்வாகிகள், கானக்குப்பம் ஊராட்சி கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மக்களுடன் முதல்வர் திட்ட முகாமிற்காக மேடை அமைக்கும் இடம்!

வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பார்வையிட்டார்!

ரிஷிவந்தியம் ஜூலை 9 - கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் தொகுதிக்கு உட்பட்ட வாணாபுரம் பகண்டை கூட்டு சாலையில் வருகின்ற ஜூலை 11ஆம் தேதி மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நடைபெற உள்ளது. இந்த முகாமிற்கு பந்தல் மற்றும் இதர ஏற்பாடுகளை செய்ய அதிகாரிகளுடன் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் வசந்தம் க. கார்த்திகேயன் நேரில் சென்று பார்வையிட்டு பல்வேறு ஆலோசனைகளை நடத்தினார். இதன் பின்னர் அவர் கூறியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர், சமூக நீதி காவலர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறப்பு திட்டமான மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நகர்ப்புறம் மற்றும் பேரூராட்சிகளில் நடைபெற்று வந்தது. இந்த சிறப்பு திட்டங்களால் ஏராளமான பொதுமக்கள் நேரடியாக பயன் பெற்று வந்ததை தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சரால் க இத்திட்டத்தை ஊரகப்பகுதிகளில் உள்ள பொதுமக்கள் பயன் பெறும் விதமாக இத்திட்டத்தை ஊரக பகுதிகளுக்கு விரிவாக்கம் செய்து 11.07.2024 முதல் ஊரகப் பகுதிகளில் நடத்திட ஆணையிட்டுள்ளார். அதன் அடிப்படையில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் மக்களுடன் முதல்வர் திட்டம் முகாம் ஊரகப் பகுதிகளில் வருகிற 11ஆம் தேதி வாணாபுரம் ஊராட்சி பகண்டை கூட்டு சாலை திருக்கோவிலூர் சங்கராபுரம் சாலையில் ஒட்டி உள்ள தனியார் திருமண மண்டப அருகில் நடைபெற உள்ளது. மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் அமைச்சர், உயர் அதிகாரிகள் கலந்து கொள்ள உள்ளனர். மேலும் ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட பல்வேறு ஊராட்சிச் சேர்ந்த பொதுமக்களும் தங்கள் கோரிக்கைகளை மனுக்களாக நேரில் அளித்து தீர்வு கண்டு பயன் பெறலாம் என வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கூறியுள்ளார்.

இதில் ரிஷிவந்தியம் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பெருமாள், துரைமுருகன், ஒன்றிய பெருந்தலைவர் வடிவுக்கரசி சாமி சுப்பிரமணியம், மாவட்டக் கவுன்சிலர்கள் கோவிந்தராஜன், அமிர்தம் ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் ராஜி, வாணாபுரம் வருவாய் வட்டாட்சியர் குமரன், வட்டார வளர்ச்சி அலுவலர் சந்திரசேகரன், ஊராட்சி மன்றத் தலைவர் தீபா அய்யனார் மற்றும் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் உள்பட பலர் உடன் கலந்து கொண்டனர்.

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 37 ஆவது ஆண்டு தமிழ் விழா அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தின் சான் ஆண்டனியோ நகரில் நடைபெற்றது. இவ்விழாவில் கலைஞர் அறக்கட்டளை அமெரிக்கா சார்பில் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு மற்றும் 101வது பிறந்த நாள் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் பல்வேறு ஆளுமைகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கலைஞர் அறக்கட்டளையின் இயக்குனர் நியுசெர்சி பாலா ஒருங்கிணைத்த இந்த நிகழ்வை மூத்த ஊடகவியலாளர் தமிழ் கேள்வி செந்தில் வேல் தொகுத்து வழங்கினார். இதில் தமிழ்நாடு மாநில திட்டக்குழுவின் துணைத் தலைவர் முனைவர் ஜெயரஞ்சன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளூர் ஷாநவாஸ், வேல்முருகன், மேனாள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பாலகிருஷ்ணன், பாலச்சந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு ஸ்கூல் ஹாக்கி லீக், ஹாக்கி யூனிட் ஆப் தமிழ்நாடு உடன் இணைந்து நடத்திய ”தமிழ்நாடு ஸ்கூல் ஹாக்கி லீக்” மாவட்ட அளவிலான போட்டிகள் மாநிலம் முழுவதும் தொடங்கி (8.7.2024) அன்று நிறைவு பெற்றது. மாநிலம் முழுவதும் இருந்து 306 பள்ளிகள் இந்த போட்டியில் கலந்து கொள்வதற்காக பதிவு செய்தனர். இதில் 81 பள்ளிகள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளாகும். இப்போட்டிகளில் மாணவர்கள் பலர் ஆர்வமுடன் பங்கேற்றார்கள். தற்போது நடைபெற்று முடிந்த மாவட்ட அளவிலான போட்டிகளில் 25 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் முதல் இடமும், 21 பள்ளிகள் இரண்டாம் இடமும் பிடித்தன. முதல் இடம் பிடித்த அணிகள் அடுத்த வாரம் நடைபெறும் மண்டல அளவிலான போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர். இந்த வெற்றியானது அரசுப் பள்ளி மாணவர்களுக்கும், அடுத்த தலைமுறை ஹாக்கி வீரர்களுக்கும் மிகுந்த உத்வேகம் அளிக்கும். மாணவர்கள் பலர் முதலமைச்சர் அவர்களுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றிகள் தெரிவித்தார்கள்.